DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.250/2025**

Prosecution **PW.4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சங்கர் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | மணி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கீழசிந்தலவாடியில் குடியிருந்து கோயம்புத்தூரில் பாத்திரக்கடையில் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தாமரை எனது அம்மா ஆவார். இறந்து போன மணி எனது அப்பா ஆவார். தேதி , மாதம் ஞாபகமில்லை. 4 வருடங்களுக்கு முன்பு பொங்கல் முடிந்த பிறகு நான் வீட்டில் இருந்தபோது மாலை 03.30 மணியளவில் லாலாப்பேட்டை மேம்பாலம் அருகே இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக என்து அம்மா தகவல் சொன்னார்.

2. நான் தகவல் தெரிந்து சம்பவ இடம் வந்து பார்த்தேன் எனது அப்பா ஆம்புலன்ஸ் மூலம் கரூர் நாச்சியம்மன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருப்பதாக சொன்னார்கள்.நான் மருத்துவமனை சென்று எனது அப்பா பார்த்தபோது எனது அப்பாவிற்கு தலை, கால், காது, மூக்கு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்பு எனது அப்பாவை மேல்சிகிச்சைகாக கரூர் GH க்கு கொண்டு சென்றோம். பின்பு மேல்சிகிச்சைகாக திருச்சி GH க்கு கொண்டு சென்றோம். திருச்சி GH ல் சிகிச்சையில் இருந்த எனது அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை:**

1. விபத்து சம்பந்தமாக எனக்கு எதுவும்நேரிடையாக தெரியாது எனது அம்மமா சொல்லித்தான் தெரியும். நான் கேள்விப்பட்டது போல் சம்பவம் நடைபெறவில்லை யென்றாலும் இறந்து போன எனது அப்பா என்பதால் நடந்த சம்பவத்தை மாற்றி கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.04 10:53:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.